# BUDGET 2021

## ஒன்றிணைந்து மேலும் வலிமையுடன் மீண்டெழுதல்



# கொவிட்-19 கிருமிப்பரவலுக்குப் பிந்திய உலகில் உள்ள நிச்சயமற்ற தன்மை

BUDGET 2021



நிச்சயமற்ற, சமச்சீரற்ற மீட்சி



அதிகரித்துவரும் தன்னைப்பேணித்தனம்



உலகளாவிய விநியோகத் தொடர்களின் மறுசீரமைப்பு



பருவநிலை மாற்றம்




நம்மால் சவால்களை
வாய்ப்புகளாக மாற்றமுடியும்.

# நாம் தொடர்ந்து, சிங்கப்பூரர்களின் வாழ்க்கையை மேம்படுத்தி, அவர்கள் கிருமிப்பரவலைக் கடந்து செல்லத் துணைபுரிகிறோம்.

## வீடமைப்பும் பேட்டைகளும்

- அதிகமான வீடுகளைக் கட்டுதல்
- அனைத்து வீடமைப்புப் பேட்டைகளையும் புதுப்பித்தல்
- மசேநி வீட்டு மானியத் திட்டத்தை மேம்படுத்துதல்
- வீவக அடைமான பாக்கித் தொகைகளுக்கான அபராதக் கட்டணங்களைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்



## பொதுப் போக்குவரத்து

- இரயில் கட்டமைப்பை மேம்படுத்துதல்
- பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்
- 2020-ஆம் ஆண்டில் பொதுப் போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லை



## சுகாதாரப் பராமரிப்பு

- புதிய மருத்துவமனைகளையும் பலதுறை மருந்தகங்களையும் கட்டுதல்
- சமூக சுகாதார உதவித் திட்டம் (சாஸ்)
- முன்னோடி, மெர்டேக்கா தலைமுறைகளுக்கான தொகுப்புத்திட்டங்கள்
- இலவச கொவிட்-19 தடுப்பூசி



# நாம் தொடர்ந்து, சிங்கப்பூரர்களின் வாழ்க்கையை மேம்படுத்தி, அவர்கள் கிருமிப்பரவலைக் கடந்து செல்லத் துணைபுரிகிறோம்.

BUDGET 2021

## கல்வி

- மேம்படுத்தப்பட்ட பாலர் பள்ளி நிதியுதவிகள்
- அதிகரிக்கப்பட்ட பாலர் பள்ளி இடங்கள்
- KidSTART; UPLIFT
- மின்னிலக்கக் கற்றல் சாதனங்கள்



## வேலைகளும் பொருளாதாரமும்

- தொழில்துறை உருமாற்ற வரைவுத் திட்டங்கள்
- ஸ்கில்ஸ்ஃபியூச்சர்
- வேலை ஆதரவுத் திட்டம்
- வேலை உருவாக்கத்திற்கான ஊக்குவிப்புத் திட்டம் உள்ளிட்ட எஸ்ஜி ஒற்றுமை இயக்கத்தின் வேலை, திறன்கள் தொகுப்புத்திட்டம்





# மேலும் வலிமையுடன் மீண்டெழுதல்

# நாம் மேலும் வலிமையுடன் மீண்டெழுவோம்:

கொவிட்-19 கிருமிப்பரவலுக்கு எதிரான நமது போராட்டத்தில் **விழிப்புநிலையைக் கட்டிக்காத்தல்**

ஒரு பொருளாதாரமாக, ஓர் ஊழியரணியாக மேலும் வலிமையுடன் மீண்டெழுவதற்கு **வளர்ச்சி வாய்ப்புகளைக் கைப்பற்றுதல்**

**நமது சமூக இணக்கத்தை வலுப்படுத்துதல்;** வலிமையாகவும் ஒற்றுமையாகவும் திகழ்தல்

இனிவரும் தலைமுறைகளுக்கு, **பசுமையும் நீடித்த நிலைத்தன்மையும் கொண்ட சிங்கப்பூரை உருவாக்குதல்**

**ஒரு சிங்கப்பூராக, நாம் ஒன்றிணைந்து இதனைச் செய்வோம்**

BUDGET 2021




# கொவிட்-19 கிருமிப்பரவலுக்கு எதிரான நமது போராட்டத்தில் விழிப்புநிலையைக் கட்டிக்காத்தல்

BUDGET 2021

## பாதுகாப்பாக மீண்டும் செயல்படத் தொடங்குதல்:

- **தடுப்பூசி போடுவதை** துரிதப்படுத்துதல்

- **கிருமிப்பரவலைக் கட்டுப்படுத்தல்**
  - ✓ தொடர்புகளின் தடங்களைக் கண்டறிதல்
  - ✓ பரிசோதனை மேற்கொள்ளுதல்
  - ✓ பாதுகாப்பான தூர இடைவெளி






# ஒரு பொருளாதாரமாகவும் ஊழியரணியாகவும் மேலும் வலிமையுடன் மீண்டெழுதல்

BUDGET 2021

## ஊழியர்களுக்கு

### வேலை ஆதரவுத் திட்டத்தை நீட்டித்தல்

- ✓ செப்டம்பர் 2021 வரை, மேலும் அதிகமாகப் பாதிக்கப்பட்ட துறைகளில் உள்ள ஊழியர்களுக்கான சம்பள ஆதரவு
- ✓ மார்ச் 2021 வரை, மற்ற துறைகள் தொடர்ந்து ஆதரவு பெறும்



BUDGET 2021

## தொழில்நிறுவனங்களுக்கு

- **கடன் தொகை பெறுவதற்கு உதவுதல்**
  - ✓ **தற்காலிக இணைப்புக் கடன் திட்டத்தை** நீட்டித்தல்
  - ✓ **தொழில்நிறுவன நிதி ஆதரவுத் திட்டத்தை** மேம்படுத்தல்
- **ஆக மோசமான பாதிப்பால், தொடர்ந்து சிரமப்பட்டு வரும் துறைகளுக்கு:**
  - ✓ விமானப் போக்குவரத்துத் துறைக்கு **மேலும் அதிகமான செலவு நிவாரணம்**, ஆதரவு
  - ✓ **கலை – கலாசார, விளையாட்டுத் துறைகள்** மீண்டு வரத் துணைபுரியும் **தொகுப்புத்திட்டங்களை** நீட்டித்தல்
  - ✓ **கொவிட்-19 ஓட்டுநர் நிவாரண நிதி** மூலம் தொடர்ந்து டாக்ஸி, தனியார் வாடகை வாகன ஓட்டுநர்களுக்கு ஆதரவளித்தல்

**மேம்பட்ட எதிர்காலத்தைக் கையகப்படுத்துதல்**

புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அவற்றுக்கான பயிற்சியை நமது ஊழியர்களுக்கு அளித்தல்

BUDGET 2021

**ஊழியர்களும் தொழில்நிறுவனங்களும் மேலும் வலிமையுடன் மீண்டெழுவதற்கு உதவ, $24 பில்லியன்**

## ஊழியர்களுக்கு

- செப்டம்பர் 2021 இறுதி வரை, **வேலை உருவாக்கத்திற்கான ஊக்குவிப்புத் திட்டம்** நீட்டிப்பு
  - ✓ வளர்ச்சி காணும் புதிய துறைகளில், மேலும் பலர் வேலை பெற உதவுதல்
- மார்ச் 2022 இறுதி வரை, திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் நீட்டிப்பு
  - ✓ பணியிடைக்கால ஊழியர்களுக்காக, எஸ்ஜி ஒற்றுமை இயக்கத்தின் பணியிடைக்கால வாழ்க்கைத்தொழில் பாதைகள், எஸ்ஜி ஒற்றுமை இயக்கத்தின் திறன்கள் தொகுப்புத்திட்டம்
  - ✓ புதிய பட்டதாரிகளுக்காக: எஸ்ஜி ஒற்றுமை இயக்கத்தின் வேலைப் பயிற்சித் திட்டங்கள்
- **புத்தாக்கத் தொழில்முனைப்பு வல்லுநர் திட்டம்**
  - ✓ தொழில்நுட்பத்திலும், புத்தாக்கத்திலும் தலைவர்களை உருவாக்குதல்



# சரியான விகிதத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு ஊழியர்களின் எண்ணிக்கை

BUDGET 2021

## ஊழியர்களுக்கு

- **வெளிநாட்டு ஊழியர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தல்:**
  - ✓ உற்பத்தித்துறையில் பணிபுரியும் சிறப்பு வேலை அனுமதி அட்டை வைத்திருப்போரின் எண்ணிக்கையைக் குறைத்தல்
  - ✓ சிறப்பு வேலை அனுமதி அட்டைக்கான வரையறைகளைத் தொடர்ந்து மறுபரிசீலித்தல்
- **உள்நாட்டு ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பை ஆதரித்தல்**
  - ✓ **சம்பள உதவித்தொகைத் திட்டத்தை ஓராண்டுக்கு** நீட்டித்தல்
- **வளர்ச்சி காணும் துறைகளுக்கு உள்நாட்டு ஊழியர்களை ஈர்த்தல்:**
  - ✓ சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்களின் **சம்பளங்களை உயர்த்துதல்**
- **திறன் பயிற்றுவிப்பை ஆதரித்தல்**
  - ✓ செப்டம்பர் 2024 இறுதி வரை, **திறனாற்றல் பயிற்றுவிப்புத் திட்டத்தை** நீட்டித்தல்



BUDGET 2021

## தொழில்நிறுவனங்களுக்கு

- **புத்தாக்கத்தை ஊக்குவித்தல்**
  - ✓ **நிறுவனப் புத்தாக்கத் திட்டத்தைத்** தொடங்குதல்
  - ✓ **புத்தாக்கத்திற்கான பொதுத் தளத்தை** மேம்படுத்துதல்
- **உலகளாவிய கூட்டு முயற்சிகளை ஊக்குவித்தல்**
  - ✓ **உலகளாவிய புத்தாக்கக் கூட்டணியை** விரிவுபடுத்துதல்



# அதிகமான இணை-நிதி ஆதரவு

BUDGET 2021

## தொழில்நிறுவனங்களுக்கு

### அதிக வளர்ச்சி உடைய தொழில்நிறுவனங்களும் புதுத் தொழில்களும் வளர உதவுதல்

- தொழில்நிறுவன நிதி ஆதரவுத் திட்டம் – புதுத்தொழில் கடன் திட்டம்

### பெரிய உள்நாட்டுத் தொழில்நிறுவனங்கள், வெளிநாடுகளில் விரிவாக்கம் காண உதவுதல்

- உள்நாட்டுத் தொழில்நிறுவனங்களுக்கான நிதித் திட்டம்

### புதிய அல்லது உள்ளார்ந்த தொழில்நுட்பங்களைப் பின்பற்ற ஊக்குவித்தல்

- வளரும் தொழில்நுட்பத்திற்கான திட்டம்

## தொழில்நிறுவனங்களுக்கு

- ஜனவரி 1, 2023 முதல் பொருள், சேவை வரி **பின்வருபனவற்றுக்கு நீட்டிக்கப்படும்**:

✓ விமானம் அல்லது அஞ்சல் வழி இறக்குமதி செய்யப்படும் குறைந்த மதிப்புடைய பொருட்கள்

✓ தொழில்களிடமிருந்து வாடிக்கையாளர்கள் பெற்றிடும், இறக்குமதி செய்யப்படும் மின்னிலக்கமல்லாத சேவைகள்

  - எ.கா. கல்வி, உடலுறுதி பயிற்சி போன்ற சேவைகளை வெளிநாட்டிலிருந்து வழங்குபவருடனான நேரடித் தொடர்பு

- பொருள், சேவைகள் வழங்கும் வெளிநாட்டு விநியோகிப்பாளர்கள், **உள்ளூர் விநியோகிப்பாளர்களுக்கு இணையான பொருள், சேவை வரியைப் பெறுவர்**





# ஒரு சமூகமாக மேலும் வலிமையுடன் மீண்டெழுதல்

# கொவிட்-19 கிருமித்தொற்றால் பாதிக்கப்பட்ட சிங்கப்பூரர்களுக்கு நாம் உதவினோம்.

| | |
|---|---|
| அனைத்துக் குடும்பங்களுக்கும் | பராமரிப்பு, ஆதரவுத் தொகுப்புத்திட்டம் |
| ஊழியர்கள், சுயதொழில் புரிவோர் ஆகியோருக்கான | கொவிட்-19 ஆதரவு மானியம்<br>சுயதொழில் புரிவோருக்கான வருமான நிவாரணத் திட்டம்<br>தற்காலிக நிவாரண நிதி |
| குறைந்த வருமான ஊழியர்களுக்கும் குடும்பங்களுக்கும் கூடுதலான உதவி வழங்க | வேலைநலன், மளிகைப் பொருட்களுக்கான பற்றுச்சீட்டு, பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு |

BUDGET 2021


BUDGET
2021
நாங்கள், கிருமிப்பரவலின் தொடர் தாக்கத்தைச்
சமாளிக்க சிங்கப்பூரர்களுக்குத் தொடர்ந்து உதவுவோம்;
யாரும் பின்தங்கிவிடாமல் இருப்பதை
உறுதிசெய்வோம்.

# சிங்கப்பூரர்களுக்கும் சிங்கப்பூர் குடும்பங்களுக்கும்

BUDGET 2021

**கோவிட்-19 மீட்சி மானியம்** வேலை அல்லது வருமான இழப்புக்கு ஆளானோருக்கு உதவ

**குடும்பங்களுக்கான ஆதரவுத் தொகுப்புத்திட்டம்** சுமார் $900 மில்லியன்

- 21 வயதுக்கும் மேற்பட்ட, தகுதிபெறும் சிங்கப்பூரர்களுக்கு: **ஒரு முறை மட்டுமே வழங்கப்படும் $200 மதிப்புள்ள பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு – ரொக்கம் (சிறப்புத் தொகை)**
- 21 வயதுக்குக் குறைவான ஒவ்வொரு சிங்கப்பூர் பிள்ளைக்கும்: **$200 நிரப்புத்தொகை**
  - ✓ பிள்ளை மேம்பாட்டுக் கணக்கு, கல்விச் சேமிப்புத் திட்டக் கணக்கு, அல்லது உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கல்விக்கான கணக்கு ஆகியவற்றின் மூலம்
- தகுதிபெறும் வீவக வீடுகளுக்கு:
  - ✓ **பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு - யு சேவ் சிறப்புத் தொகை** மூலம் $200 வரையிலான கூடுதல் பயனீட்டுக் கட்டணத் தள்ளுபடி
  - ✓ **சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடி** மேலும் ஓர் ஆண்டுக்கு நீட்டிப்பு
- அனைத்து சிங்கப்பூர் வீடுகளுக்கு: **$100 மதிப்புள்ள சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டுகள்**
  - ✓ குடியிருப்பு வட்டாரக் கடைகளிலும் உணவங்காடி நிலையங்களிலும் பயன்படுத்தலாம்

BUDGET 2021

உதவி தேவைப்படுவோருக்கு, மேலும் அதிகமாக நாங்கள் உதவுவோம். ஒவ்வொரு சிங்கப்பூரருக்கும் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் வாய்ப்புகள் இருப்பதை நாங்கள் உறுதிசெய்வோம்.

# ஒவ்வொரு பிள்ளையின் தொடக்கநிலை பாராமல், அவர்களின் மிகச் சிறந்த ஆற்றலை வெளிக்கொணர்தல்

BUDGET 2021

- **நாம் முன்கூட்டியே தொடங்குகிறோம்**

✓ **அனைத்து மாணவர்களையும் உள்ளடக்கிய** முன்னோடி **ஆதரவுத் திட்டம்**:

- மாறுபட்ட தேவைகளைக் கொண்ட கூடுதலான பிள்ளைகளைப் பாலர் பள்ளிகளுக்குச் செல்ல அனுமதிக்கும்




# எளிதில் பாதிப்படையக்கூடிய தரப்பினருக்கு

## ஆக அதிகமான உதவி தேவைப்படுவோருக்குக் கூடுதல் உதவி

BUDGET 2021

### குறைந்த சம்பள ஊழியர்கள் குறித்த முத்தரப்புப் பணிக்குழு

- குறைந்த சம்பள ஊழியர்களை கைதூக்கிவிடுவதற்கான வழிமுறைகளை ஆராய்தல்



### நாடளாவிய சமூகத் தொடர்புக் கட்டமைப்பு அடுத்த இரண்டு ஆண்டில் விரிவுபடுத்தப்படும்

- வாடகை வீடுகளில் வசிக்கும் பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு மேம்பட்ட ஆதரவை வழங்க




### வேலை வாய்ப்புகளை அதிகரித்தல்

- உடற்குறையுள்ளோருக்கான **வேலை வாய்ப்புகளை அதிகரித்தல்**




**கூடுதலான ஆதரவு தேவைப்படுவோரை, நாங்கள் தொடர்ந்து அடையாளம் கண்டு உதவுவோம்**

## தொடர்ந்து வேலை செய்ய விரும்பும் நமது மூத்தோருக்குத் துணைபுரிதல்

BUDGET 2021

- மூத்த ஊழியர்களின் பணி ஓய்வுபெறும் வயதை **முன்கூட்டியே அதிகரிக்கும் நிறுவனங்களுக்கான மானியம், பகுதி நேர மறு-வேலை நியமனத்திற்கான மானியம்** ஆகியவற்றுக்குக் கூடுதலான ஒதுக்கீடு
  - ✓ அதிகமான மூத்த ஊழியர்கள் வேலையில் நீடித்திருக்க உதவுதல்





# அனைவருக்கும் உரிய, நீடித்து நிலைக்கத்தக்க, ஓர் இல்லம்


- மேலும் தூய்மையான எரிசக்தி வாகனங்களைப் பயன்படுத்துதல்


  ✓ மின்சார வாகனம் தொடர்பான திட்டங்களுக்கு $30 மில்லியன்
  ✓ **மின்னூட்டுவதற்கான உள்கட்டமைப்பை** விரைவாக **நடைமுறைப்படுத்துவதன்** மூலம் மின்சார வாகனப் பயன்பாட்டை ஆதரித்தல்
  ✓ மின்சார வாகனம் சார்ந்த மாற்றங்களுக்கு **ஊக்கத்தொகை அளித்தல்**

- எரிபொருள் வாகனங்களின் பயன்பாட்டைக் குறைத்தல்

  ✓ **பாதிக்கப்பட்ட வாகன ஓட்டுநர்களுக்குத் தகுந்த இழப்பீடுகளுடன் பெட்ரோல் தீர்வையை உயர்த்துதல்**





# பெட்ரோல் / பெட்ரோல்-மின்சார வாகனங்களுக்கான பெட்ரோல் தீர்வை அதிகரிப்புகளை ஈடுசெய்தல்:

## மோட்டார்சைக்கிள்கள்

- பின்வரும் இயந்திரக் கொள்ளளவைக் கொண்ட மோட்டார்சைக்கிள்களின் தனிப்பட்ட உரிமையாளர்களுக்கு **ரொக்கமாக, பெட்ரோல் தீர்வை தள்ளுபடி**:
  - 200cc வரை: **$80**
  - 201 முதல் 400cc வரை: **$50**
- ஓர் ஆண்டுக்கு **60% சாலை வரித் தள்ளுபடி**

## டாக்ஸிகளும் தனியார் வாடகை வாகனங்களும்

- தற்போது பணியில் உள்ள ஓட்டுநர்களுக்கு, **$360 மதிப்புள்ள பெட்ரோல் தீர்வை தள்ளுபடி** நான்கு மாத காலத்திற்குப் பகிர்ந்தளிக்கப்படும்
- ஓர் ஆண்டுக்கு **15% சாலை வரித் தள்ளுபடி**

## சரக்கு வாகனங்களும் பேருந்துகளும்

- ஓர் ஆண்டுக்கு **100% சாலை வரித் தள்ளுபடி**

## கார்கள்

- ஓர் ஆண்டுக்கு **15% சாலை வரித் தள்ளுபடி**

BUDGET 2021


- **நமது தேசம் முழுமைக்குமான முயற்சியை ஆதரித்தல்:**

✓ நமது தொழில்துறைகள் புகை உமிழ்வைக் குறைக்க ஆதரித்தல்
✓ நீடித்த நிலைத்தன்மை சார்ந்த திட்டங்களுக்கு, சிங்கப்பூரர்களுடன் இணைந்து ஆதரவளித்தல்





# நமது எதிர்காலத்திற்கான நீடித்து நிலைக்கத்தக்க நிதி உத்தி


BUDGET
2021
நமது திடமான நிதிகள், நம்மை ஆக மோசமான
சூழல்களை சமாளித்து, மீட்சி பெறும்
நிலைக்கு மாற உதவியுள்ளன.
நமது சிக்கனமான, நிலைத்திருக்கவல்ல
அணுகுமுறையை நாம் தொடரவேண்டும், அப்போதுதான்,
நம்மால் வருங்கால முன்னுரிமைகளை ஈடுசெய்து,
வருங்கால நெருக்கடிகளைத் துடைத்தொழிக்கமுடியும்.

# சுகாதாரப் பராமரிப்பு, சமுதாயத் தேவைகளுக்கான தொடர் செலவுகளை ஆதரிக்க, 2022 முதல் 2025-க்குள் பொருள், சேவை வரி அதிகரிப்பு

பொருளியல் சூழல் கருதி, 2021-இல் அதிகரிக்கப்படாது; ஆனால், விரைவில் அது அதிகரிக்கப்படவேண்டும்

BUDGET 2021

**சிங்கப்பூரர்களுக்கான இதன் தாக்கத்தை, நாம் தணிக்க முற்படுவோம்.**

### பொருள், சேவை வரிக்கான உத்தரவாதத் தொகுப்புத்திட்டம் பொருள், சேவை வரி அதிகரிப்பின் தாக்கத்தைத் தாமதப்படுத்தும்:

- ✓ பெரும்பாலான சிங்கப்பூர் குடும்பங்களுக்கு, குறைந்தது 5 ஆண்டுக்கு
- ✓ குறைந்த வருமானக் குடும்பங்களுக்கு, 10 ஆண்டுக்கு

### குறைந்த, நடுத்தர வருமானக் குடும்பங்களுக்குப் பொருள், சேவை வரிச் செலவுகளைக் கொடுத்து உதவுதல்

- ✓ அரசாங்க நிதியுதவி பெற்ற சுகாதாரப் பராமரிப்பு, கல்வி ஆகியவற்றுக்கான பொருள், சேவை வரி மீட்டுக்கொள்ளப்படும்
- ✓ நிரந்தர பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டுத் திட்டத்தை மேம்படுத்துதல்





# ஒரு சமூகமாக, மேலும் வலிமையுடன் மீண்டெழுதல்

# 2023 இறுதி வரை நீட்டிப்பு

- ✓ அங்கீகாரம் பெற்ற பொதுநல அறக்கொடை அமைப்புகளுக்கான நன்கொடைகளுக்கு **250% வரிக் கழிவு**
- ✓ நிறுவனத் தொண்டூழியத்தை ஊக்குவிக்கும் நோக்கில், **தொழில்களுக்கும் அங்கீகாரம் பெற்ற பொதுநல அமைப்புகளுக்கும் இடையிலான பங்காளித்துவத் திட்டம்**





# முடிவு



BUDGET
2021

வரவுசெலவுத் திட்டம் 2021, கொவிட்-19 கிருமிப்பரவலை எதிர்த்துப் போராடுவதற்கான உடனடித் தேவைகளைச் சமாளிக்க உதவுவதுடன், புதிய இயல்புநிலையில் செழிப்பதற்கு நம் நாட்டை நிலைப்படுத்த உதவும்.

**ஒன்றிணைந்து, நாம் மேலும் வலிமையுடன் மீண்டெழுவோம்.**

# எடுத்துக்காட்டு 1: இளம் பிள்ளை உடைய இளம் தம்பதி



| | | |
|---|---|---|
| தந்தை | 34 வயது | மாதந்தோறும் $2,200 சம்பளம் |
| தாய் | 32 வயது | மாதந்தோறும் $2,300 சம்பளம் |
| மகள் | 3 வயது | - |

| | |
|---|---|
| வீட்டு வகை | 3-அறை வீவக வீடு |

BUDGET 2021

# எடுத்துக்காட்டு 1: இளம் பிள்ளை உடைய இளம் தம்பதி



2021-ஆம் ஆண்டில், இளம் பிள்ளை உடைய இளம் தம்பதி,

$134,000-க்கும் அதிகமான பலன்களைப் பெறக்கூடும்.

| | |
|---|---|
| **குடும்பங்களுக்கான ஆதரவுத் தொகுப்புத்திட்டம்**<br>பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு - ரொக்கம் (சிறப்புத் தொகை), பொருள், சேவை வரிப் பற்றிச்சீட்டு - யு சேவ் (சிறப்புத் தொகை), பிள்ளை மேம்பாட்டுக் கணக்கு நிரப்புத் தொகை, சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டு, சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடி | சுமார் $1,000 |
| **பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு - ரொக்கம்** | $600 |
| **பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு - யு சேவ்** | $355 |
| **சுகாதாரப் பராமரிப்பு நிதியுதவிகள்** | $1,000-க்கும் அதிகம் |
| **பாலர் பள்ளிக்கான ஆதரவு**<br>குழந்தைப் பராமரிப்பு நிதியுதவிகள், பிள்ளை மேம்பாட்டுக் கணக்கிற்கான பங்களிப்புகள் உட்பட | $11,880 |
| **வீட்டு மானியம்**<br>தம்பதி தங்கள் பெற்றோருக்கு அருகில் மறுவிற்பனை வீடு ஒன்றுக்கு முன்பதிவு செய்தால், அவர்கள் மத்திய சேமநிதி மானியங்களுக்கும் நெருக்கத்தை ஊக்குவிக்கும் வீட்டு மானியங்களுக்கும் தகுதிபெறுவர் | $120,000 |
| **மொத்தம்** | $134,000-க்கும் அதிகம் |

BUDGET 2021

# எடுத்துக்காட்டு 2: 3-தலைமுறைக் குடும்பம்



| | | |
|---|---|---|
| பாட்டி | 72 வயது | பணி ஓய்வு பெற்றவர் |
| தந்தை | 45 வயது | மாதந்தோறும் $6,500 சம்பளம் |
| தாய் | 42 வயது | மாதந்தோறும் $2,300 சம்பளம் |
| மகள் | 13 வயது | உயர்நிலைப்பள்ளி மாணவி |
| மகன் | 10 வயது | தொடக்கப்பள்ளி மாணவன் |

| | |
|---|---|
| வீட்டு வகை | 5-அறை வீவக வீடு |

# எடுத்துக்காட்டு 2: 3-தலைமுறைக் குடும்பம்

BUDGET 2021

## 3-தலைமுறைக் குடும்பம்,
## $35,500-க்கும் அதிகமான பலன்களைப் பெறக்கூடும்.



| | |
|---|---|
| **குடும்பங்களுக்கான ஆதரவுத் தொகுப்புத்திட்டம்**<br>பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு - ரொக்கம் (சிறப்புத் தொகை), பொருள், சேவை வரிப் பற்றிச்சீட்டு - யு சேவ் (சிறப்புத் தொகை), கல்விச் சேமிப்புக் கணக்கு நிரப்புத் தொகை, சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டு, சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடி | **சுமார் $1,200** |
| **பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு - ரொக்கம்** | **$600** |
| **பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு - யு சேவ்** | **$275** |
| **கல்விக்கான ஆதரவு**<br>கல்விக்கான நிதியுதவிகள், கல்விச் சேமிப்புக் கணக்குப் பங்களிப்புகள் உட்பட | **$25,500-க்கும் அதிகம்** |
| **சுகாதாரப் பராமரிப்பு நிதியுதவிகள்** | **$7,500-க்கும் அதிகம்** |
| **மெடிசேவ் நிரப்புத்தொகைகள்**<br>பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு, முன்னோடித் தலைமுறைத் தொகுப்புத்திட்டம் ஆகியவற்றின் கீழ் | **$500** |
| **மொத்தம்** | **$35,500-க்கும் அதிகம்** |